## <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>

**இடைநிலை (பத்தாம் வகுப்பு) , மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மற்றும் இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வுகள், மார்ச் / ஏப்ரல்–2025**

**தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் தொடர்பான**

**செய்திக் குறிப்பு**

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் – 2025, இடைநிலை (பத்தாம் வகுப்பு), மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (தத்கல் உட்பட) தங்களது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை **14.02.2025 அன்று பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள், www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று முதலில் "HALL TICKET" என்ற வாசகத்தினை 'Click' செய்தால் தோன்றும் பக்கத்தில் உள்ள " SSLC / HIGHER SECONDARY FIRST YEAR / SECOND YEAR– MARCH/APRIL– 2025 PRIVATE CANDIDATE HALL TICKET DOWNLOAD" என்ற வாசகத்தினை 'Click' செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது <u>விண்ணப்ப எண்</u> (<u>Application Number</u>) மற்றும் <u>பிறந்த தேதியினைப் (Date of Birth)</u>, பதிவு செய்து, அவர்களுடைய தேர்வுக் கூட நுழைவுச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வெழுதவுள்ள தனித்தேர்வர்களுக்கு இரண்டு தேர்வுகளுக்கும் சேர்த்து ஒரே தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு மட்டும் வழங்கப்படும்.

மார்ச் – 2025, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கால அட்டவணைகளை (TIME TABLE) www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

ஒம்/–
அரசுத் தேர்வுகள் இயக்குநர்

நாள்: 05.02.2025
இடம்: சென்னை – 600 006.